17

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சித்தாந்தம்.

தொகுதி ௮.] 1919ஆ மார்ச்சுமீ [பகுதி ௬.

தசபுராணம்.

தொகுதி - ௮ - பகுதி - ௫ - பக்கம் - ௨௨ - தொடர்ச்சி.

நிரவொலிவெள்ள மண்டிநெடுவண்டமூடநிலநின்று தம்பமதுவப்
பரமொருதெய்வமெய்த விதுவொப்பதில்லை யிருபாலு நின்றுபணி
யப்
பிரமனு மாலுமேலை முடியோடு பாதமறியாமை நின்றபெரியோன
பரமுதலாய தேவர்சிவனாய மூர்த்தியவனு நமக்கோர் சரணே.

இதன் பொருள்: நிரவு=நிரம்பிய, ஒலி=ஓசையையுடைய, வெள்ளம்,=பெருக்கு, மண்டி,=அதிகரித்து, நிலம் நின்று=பூமிமுதல், நெடுமையண்டம் =எல்லா அண்டங்களையும், மூட=பிரளயத்தால் மறைக்க, (அக்காலத்து) பிரமனும், மாலும்=பிர்ம விஷ்ணுக்களிருவரும், ஒருதெய்வம்=ஒப்பற்ற தெய்வம் (தாங்களே என்று எண்ணி) எய்த=ஒருவரோடு ஒருவர் போரிட்டு அடைய, அப்பரம்=அச்சிவபிரான் (இவர்கள் அகந்தையைநீக்க) தம்பமது=தாணு உருவாதலும், (கண்ட இருவரும்) இது=இத்தாணுருவத்தினை, ஒப்பது=ஒப்பாவது, இல்லை=யாம் கண்டோம் இல்லை,

(ஆதலால்) மேலைமுடியோடு=மேற்சென்றுள்ளதாயுள்ள முடியையும், பாதம்=பாதாளம் கடந்த திருவடியையும், (காண்போமென எண்ணி) அறியாமை=தேடி அறியாதவர்களாய், இருபாலும் நின்று=இரண்டு பாலினும் தங்கி, (துதிப்பதே தகுதியென எண்ணி) பணிய=துதித்து வணங்க, நின்ற=அவர்கள் இருவருக்கும் அருள் செய்து நின்ற, பெரியோன்=அளவைக்கடந்தவன், முதலாயதேவர்=சிருட்டி முதலாய தொழிலைச் செய்யும் முதன்மையான தேவர்களுக்கும், பரம்=தலைவனானவன், சிவனுயமூர்த்தி=மங்கலமாய முத்தியைத்தரும் திருமேனியுடையான், அவன்=அப்பெரியோன், நமக்கு=நம்போன்றவருக்கு, ஓர்சரணும்=ஓர் அடைக்கலப் பொருளாவன்.

இதனை வாமனபுராணம் முதலாகக்கொண்டு விளக்குவோம்.

"தத: பிதாமஹோதேவ: கேசவஸ்சஜகத்பதிம்
ஆஜக் மதுஸ்த முத்திஸ்ய யதர லிங்கம் பவஸ்யது: இத்யாதி
நைவரந்தமம் பராத்ப் ரஹ்மாவிஷ்மித: புகராகத:
விஷ்ணுர்கத்வாத பாதாளாந் ஸப்தலோக பராயண:
சக்ரபாணிர் விநிஷ்க்ராந்தோலிங்கம் நலப்தேமுநே
விஷ்ணு: பிதாமஹஸ்சோ பௌஹரலிங்கம் ஸமேத்யஹி
க்ருதாம் ஜலிபுடௌ பூத்வாஸ் தோத்ரம் தேவஸ்ய சக்ரது:"

பிரமனுக்கு இரண்டாயிரம் சதுர்யுகம் ஓர் நாளென வகுத்தவண்ணம் ஆயிரம் சதுர்யுகம் ஒழிய ஓர்பகல் கழிந்தது. அப்போது பிரமன் துயின்றனன். அக்காலத்துள் பதினன்கு இந்திரர்கள் மரித்தனர். ஊழிவெள்ளந்தோன்றி அண்டமுகடுவரையில் மூடி, உலகிலுள்ள உயிர்களை ஒழித்தது. அக்காலத்து திருமால் சிவத்யானத்துடன் ஓராலிலையில் துயின்றனர்.

இதனுள் மற்றோர் ஆயிரம் சதுர்யுகம் கழிய பிரமனுக்கு இரவு நீங்கியது. பிரமனும் நித்திரையினின்று நீங்கி உயிர்களைப்படைத்து இந்திரன் முதலியோரை அவரவர் பதவியிலிருத்தித் தான் உறங்கினுல் உலகம் உறங்கும். தான் விழித்தால் உலகம் உண்டாகும். ஆதலால் தன்னைவிட வேறு தெய்வம் இல்லையென்று இறுமாந்து இருநிலமுழுவதும் பார்த்து வருகையில் திருமால் பாற்கடலில் பள்ளிகொண்டிருப்பதைக் கண்டு அவன் மார்பைத்தட்டி எழுந்திரு என்றனன். பாற்கடல் துயின்று தன்னைப்பரமென எண்ணிய விண்டுவும் விழித்தவராய்த் தம்மைத்தட்டி யெழுப்பிய

சதுர்முகனைப் பார்த்தனர். பிரமனும் விழித்த விண்டுவை நீராரென, விண்டுவும் யான் உன்தந்தை என்றனர். அதைக்கேட்ட பிரமன் நீர் இன்னும் விழிக்கவில்லை ஆதலால் நானே உன்னைப்படைத்த தந்தை ஆவேன் என்றனன். இவ்விதம் ஒருவருக்கொருவர் வாதிட்டுக் கோபங்கொண்டு ஒருவரை ஒருவர் போரில் வெல்ல எண்ணினராய்ப் போர்க்கோலங்கொண்டு போரிட்டனர். உயிர்களெல்லாம் இவர்கள் இருவரது இறுமாப்பால் நேர்ந்த யுத்தித்திற்கு அஞ்சிக் கயிலைமலையை யடைந்தன. எல்லாம்வல்ல சிவபெருமான் இவர்கள் இருவரது அறியாமையை நீக்கவும் உயிர்களைக் காக்கவும் அவ்விருவர்க்கும் இடையில் ஓர் அழற்றம்பமாய் எழுந்தருளினர். அச்சோதிவடிவாகிய தம்பத்தை இருவரும் கண்டு இவ்வடிவின் அடியையாவது முடியையாவது காண்பவர் எவரே அவரே பெரியர் எனத்தீர்மானித்து விஷ்ணுமூர்த்தி வராகவடிவேற்று அடியைக் காண்பான் பாதாளம் ஏழும் கடந்துங் காணாதவராய் மறுபடியும் பூமியில் வந்து நின்றனர். பிரமன் முடிகாண்பதாக அன்னவடிவுகொண்டு ஏழு உலகங்களுந்தேடி அறியாதவனாய் இன்னும் தேடுவோமானால் இறந்து விடுவோம் என எண்ணிப் பூவுலகமே வந்துசேர்ந்தனன். வந்தவனாய பிரமன் விஷ்ணுமூர்த்தியைக் கண்டு நாம் அறியாமையால் இறுமாந்து இவ்விடர்ப்பட்டோம். இனி சதுர்த்தப்பொருளாகிய சதாசிவனைப் பணிந்து உய்ந்து போவோம் எனத்தீர்மானித்து இருவரும் வணங்குதலும் தாணுவாய சிவபெருமான் திருவருளுடையராய் அவ்விருவரெதிரில் காளகண்ட திரிநேத்திரராய் எழுந்தருளினர். அப்பெருமானைத் தரிசித்த பிரம விஷ்ணுக்கள் பலமுறை பணிந்து துதித்துப் பாடி அடியேங்கள்செய்த பிழையைப் பொறுத்தருளல் வேண்டும் என்று இறைஞ்சிக் கேட்டுக்கொண்டனர். சிவபெருமானும் உங்கட்கு ஞானமுண்டாகக்கடவது உங்கள் கிருத்தியங்களை ஒற்றுமையோடும் செய்யக்கடவீர் என்று ஆஞ்ஞாபித்துத் திருவுருக்கரந்தருளினர். என்பதே புராணமாகும்.

இங்ஙனம்,

பத்திராதிபர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நன்மை தீமை யறியும் மரம்

(இருவினை மாமரம்)

இயற்றியது.

மிஸ்டர் J. M. நல்லசாமி பிள்ளை B. A., B. L., மதுரை.

தொகுதி-8-பகுதி-1-பக்கம்-22-தொடர்ச்சி.

நாம் முதல் முதல் தவறி வீழ்ந்தது இறைவன் ஆணையை மீறியதாலும், அவன் இச்சையை நம்மிச்சையால் எதிர்த்ததாலும் நேர்ந்தது. ஆகவே நாம் வீடு அடையும் நெறியும், அவன் இச்சையும் நம்மிச்சையும் நேர்பட்டு, அவனிச்சைக்கு நம்மிச்சை ஒடுங்கி, பரலோகங்களில் அவனிச்சை நிகழுமாறே முதற்படைப்பில், நாம் சிறு குழந்தைகள் போலும் மலர்ந்தும் சூதுவாதனை யின்றியும் இனிய தாய்தந்தையர்களிடம் முழுநம்பிக்கையுடன் தழுவியும், நாளை யென்னமோ வென்று நாடாது, அவர்கள் சொல்லுக்கு முழுதும் உட்படிந்தும், தான் என்னும் அகங்காரமும், இச்சையுமில்லாதிருக்கின்றோம். ஆனால் இந்நிலை நெடுநாள் நிற்பதில்லை. தாய் தந்தையர்கள் சொல்லுக்கடங்காது தன் இச்சா ஞானக்கிரியைகளை எழுப்பி அறியாமைமேலிட்டு வினைமுட்டையைச் சம்பாதிக்கின்றது. மின்னும்; தாயினுமினிய சங்கரன்பால், பிள்ளைகள் போலும் சிரத்தையும் அன்பையும் வைத்து நம்பாவிடில் இவ்வினையை வெல்ல முடியாததாகும். உலகம் பித்தனெனக்கொண்ட இயேசுகிறிஸ்து நாதர் கூறியவாறு, நாமும் பிள்ளைகளாக மீண்டும் பிறந்தால் ஒழிய, பரலோக சுயராஜ்ஜியத்தைப் பெறலாகாது.

"பாலரொடு பேயர் பித்தர் பான்மையென நிற்பதுவே
சீலமிகு ஞானியர்தஞ் செய்கை பராபரமே."

கர்மம் அல்லது வினை யென்பது ஒரு செயல். இச்செயலினால், இன்பம் அல்லது துன்பம் விளையும். இன்பம் விளையின் அதனை நன்மை யென்றும், துன்பம் விளையின், அதனைத் தீமையென்றும் சொல்லுவார்கள். நன்மை அறம், புண்ணியம் எனவும் தீமை மறம், பாவம் எனவும் கூறப்படும். சிவஞான சித்தியாரில் புண்ணியம் உயிர்க்கு இதம் (இன்பம்) செய்தல், பாவம் உயிர்க்கு அதம் (துன்பம்) செய்தல் என்று விளக்கியிருக்கிறது. அதன் விரிந்த அர்த்தத்தில், தற்கால மேலைநாட்டு நீதிநூலாரில் ஒரு சாரராகிய நன்மை மேற் கோளார் (Utilitarians) அறம் என்பதை பெரும்பாலரின் பெருத்த இன்பம் எனவும், இது நாம் கூறுவதோடு ஒப்பி, பொருள் விளக்கம் உண்மையாகின்றது. அறம் பாவம் நன்மை தீமை எதுவென்பதை நம் மன சாட்சியினால் நிறுக்கும்போது, ஒவ்வொருவருடைய மனசாட்சியும் மற்றொருவருடைய மனசாட்சியுடன் வேறுபடுகின்றதைக் காண்கின்றோமாதலால், இம்மன சாட்சியைவிட மேலான ஒரு அளவும் அதிகாரமும் வேண்டும். ஆகையால், கர்மம் என்பது வினைகளும்தொன்றுதொட்டுப் பிறழாது ஒன்றை ஒன்று பின்பற்றி வரும் வினைத்தொடர்ச்சியும், மனிதவாழ்வின் வினையும் பயனுமாகிய திரட்சியுமாகும். 'நன்மை விதைத்தால் நன்மை விளையும், தீமை விதைத்தால் தீமை விளையும்' என்றபடி, ஒருவன் செய்த புண்ணிய பாவங்களின்படி, இன்பதுன்பத்தை ஊட்டுவிக்கும், என்றும் மாறாத ஒரு நியதியையே கர்மமலம், கர்மவிதி (Law of Karma) யென்று கூறுவர்.

இந்த விதியின்படி, கர்மபலன்களை அதற்கு ஒத்த ஒரு சீரத்தில் அனுபவிக்க இருப்பதில், முற்செய் வினையின்படியே, அவனுக்கு தேகமும் கிடைக்கும். அவன்வினை நல்லதாயிருந்தால் சுத்ததேகமும், கெட்டதாயிருந்தால் அசுத்ததேகமும் கிடைக்கும்.

"உள்ளதே தோற்ற உயிரணையும் அவ்வுடலின்
உள்ளதாமுற்செய்வினை யுள்ளடைவே—வள்ளலவன்
செய்பவர்செய்திப் பயன்விளைக்குஞ் செய்யேபோல்
செய்வன் செயலணையா சென்று."

ஆகவே. புல்பூண்டு முதல் மக்கள் தேவர் என்ற எண்ணில் பிறப்பும், அணுப்பிரமாணமான புழுமுதல் ஒரு கிறிஸ்து நாதர், ஒரு மாணிக்கவாசகர் அந்தமாகிய பல்வேறு குணமும் அறிவும் ஆற்றலுமுள்ள தேகப்பிறவிகள் உள்ளவாயின அறத்தை மென்மேலுஞ் செய்யின் அவன் உள்ளமும்,

அறிவும் சுத்தமாகி மேலு மேலும் உடலைப்பெறுகின்றான். அவ்வுடலும், தேய்க்கத்தேய்க்கப் பந்தமறும் பளிங்கேபோல், பரிசுத்தப்படவும் அவ் வுடலில், ஈசனுடைய அகண்ட சோதியும் மகிமையும் புரையறப் பிரதிப லித்து, கடையில், அச்சோதியிலேயே ஆழ்ந்துவிடுகின்றான்.

மேல், இவ்வுடற்பிறப்புகளில், மானிடப்பிறவியே முக்கியமானதால் இம்மானிடவுடலினாற்றான். நாம் நற்கதி சேரும் வண்ணம் உளதாகவும், இவ்வுடலிறக்கு முன்னமே நாம் எச்சரிக்கையோடு இவ்வுடலிருக்கும் போதே நல்லறத்தைச்செய்ய, இப்பிறப்பிலே நமக்கு வீடுகிடைக்காவிடி னும், அடுத்த பிறப்பிலேயாவது, ஒருமேலான தேகத்தைப்பெற்று நற்கதி யைப்பெற வழியாகும்.

> "எண்ணரிய பிறவிதனின் மானிடப்பிறவிதான்
> யியாதினு மரிதரிதுகாண்
> இப்பிறவிதப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
> எதுவருமோ அறிகிலேன்.

ஆகையால்,

> தானந்தவம் தருமஞ்சந்ததமுஞ் செய்வர்சிவ
> ஞானந்தனையணையநல்லோர் பராபரமே,"

ஆகவே இக்கருமமலம், சோம்பேரிஞானத்தையும் பொருப்பின்மை யும் உணர்த்தாது. எல்லாவுயிரினுடைய நன்மையை நாடவேண்டுமென் கிற நன் முயற்சியையும் ஒழுக்கத்தையும் கற்பித்து, மற்றெந்த சமயங்களி லும் காணப்படும் நீதி நெறிக்கும் தகுந்த நிலையுள்ள ஆதாரமாயுமிரா நின் றது.

மேல் நல்வினையை செய்யும்போதும், அதன் பலனைநோக்கிச் செய் யக்கூடாது. பலனை நோக்காமலே, புசிக்கக்கருதாமலே செய்யவேண் டும். ஏனெனில், அப்படி பலனை நோக்குவதனால், உலகத்தின் மீண்டுங் கட்டுப்பட்டு, மீண்டும் மீண்டும் பிறப்புண்டாகும். இருவினையையும் செய்து இருவினை யொப்படையவேண்டும். இவ்விருவினையொப்பு அவன் செய்யும் வினைகளில், அவன் எல்லாநற்செயல்களும், அளவும், எல்லா தீச் செயல்களின் அளவும் ஒத்திருக்க வேண்டுமென்பதல்ல. அவன் எவ்வளவு பாவஞ் செய்தானோ அவ்வளவு புண்ணியம் செய்யவேண்டு மென்பதல்ல. இருவினையொப்பு வடமொழியில் "கர்ம சாம்ய"மென்றுபேர். யொப்பு,

சமம், என்ற சொல் ஒரு திராசின் முள் எந்த பக்கமும் சாயாமல் நடுவில் நிற்பதென்று பொருள். ஒரு தட்டில் ஒருவீசை கருப்பட்டியும், ஒரு தட்டில் ஒருவீசை வேப்பம் புண்ணாக்கும் வைத்து நிறுத்தால் இந்த ஒப்பு சமத்துவம் உண்டாகும். ஆனால் இதுவுண்மையான சமத்துவமாகுமா? ஆனால் உண்மை யென்னவெனின், ஒரு தட்டில் கருப்பட்டியிருக்கிறதென்று அதில விருப்படைந்து, முள் அந்தப்பக்கம் சாயாமலும், வேப்பம்புண்ணாக்கு இன்னொரு தட்டிலிருக்க அதில் வெறுப்படைந்து முள் கோணாமலும் இருத்தல் என்பது பொருள். அதனால் நல்வினையில், இன்பம் தருவதில் வேண்டுதலும், துன்பம் தருவதில் வேண்டாமையும் வைக்காது, இன்பம் தருமானாலும் துன்பம் தருமாயினும் ஆண்டவன் ஆணையை மீறாது அறநெறியில் ஒழுகுதலேயாகும். இந்நிலையில், அவன் நன்னெறியில் ஒழுகுவதால் இன்பம் தருவதாயிருந்தான் மட்டும் அதில் அவன் ஆசையைச் செலுத்தமாட்டான். துன்பம் தருவதாயின், அதைச் செய் ாமலிருக்கவுமாட்டான். நாம் சாதாரணமாய் உலகில் விரும்பும், மண், பொன் பெண், சுகம் முதலியன வெறுப்பதும், வறுமை, அசுபம் முதலியன.

ஆனால் இருவினை யொப்பு அடைந்தவனுக்கு, ஓடும் பொன்னும், வறுமையும் செல்வமும், அமிர்தமும் நஞ்சும், இகழ்ச்சியும் புகழ்ச்சியும் ஒன்றேயாகும். தூசியையும் உமியையும் ஒருவன் வேண்டுதல் வேண்டாமையின்றி எப்படி ஒருவன் நோக்குவானோ அவ்விதம் நோக்குவன். இந்நிலையிலேதான் ஒருவன் செயற்கரிய செய்கைகளெல்லாம், அதி உன்னத சாம்பிராச்சியங்களை நாடுவன். அதிவீரத்தொழில்களைப் புரிவன். தன்னை மறந்து பரோபகாரமான அறங்களை இயற்றுவன். தன்னுயிரையுமிழப்பன்.

மேலும் இவ்வுண்மைகள், திருப்பாற்கடல்கடைந்த ஐதிகத்தினால் இனிது விளங்கும். துர்வாசமகாரிஷியின் சாபத்தினால் தேவர்கள் செல்வசெருக்கு, பொன் பொருள் யானை குதிரை தவம் தானம், பலம் பராக்கிரமம் முதலியவற்றை இழநதார்கள். வறுமை நோயுற்றார்கள். வறுமையின்மேல் வெறுப்பும், செல்வத்தின்மேல் விருப்புங் கொண்டார்கள். கூட்டம் கூடினார்கள். தீர்மானஞ் செய்தார்கள். மந்திரகிரியை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்தால் இழந்த செல்வமெல்லாம் இன்றே பெறலாமென்றெண்ணினார்கள். அசுரர்களையும் கூட்டாகச் சேர்த்துக்கொண்டார்கள். இந்திரன் முதலிய

தேவர்கள் ஒரு பக்கமும், அசுரர்கள் ஒரு பக்கமும் நின்று கடலைக்கடைந்தார்கள். என்ன விளைந்தது? மலையிலுள்ள எண்ணில் சராசரங்களும், கடலிலுள்ள அநந்தகோடி உயிர்களும் கலக்குற்று துன்பமும் சேதமுமடைந்தன. வாசுகியும் துன்பம் பொறுக்கமாட்டாமல் நஞ்சைக் கக்கிற்று. இந்த சீவ கோடிகளுக்கு நேர்ந்த துன்பமாகிய பாவம் விஷமாகத்திரண்டது. தேவர்களையும் அசுரர்களையும் பொசுக்க ஆரம்பித்தது. ஓடோடினார்கள். எங்கு சென்றாலும் நஞ்சுக்குத்தப்ப வழியில்லை. முன்பு கூடிய கூட்டத்திலும் பின் ஓடிய கூட்டத்திலும் நாம் கவனித்தல் ஒருவன் மாத்திரமில்லை அவன் யார்? உருத்திரசிவன். மற்றென் செய்வார்கள். இதுவரையிலும் தேவாதி தேவன் ஒருவன் உளன் என்று அவர்கள் சித்தத்திலுதிக்கவில்லை. உதித்திருந்தால், தாங்கள் செய்யப்போகும் காரியம், எண்ணிலுயிர்கட்கு ஊறுசெய்வது அவன் உளத்துக்கு சம்மதமாகுமோவென்று எண்ணியிருப்பார்கள். பாவஞ்செய்தபின், வினைவருத்த, அப்பொழுது "அய்யோ அய்யோ தெய்வமே! எங்களை காப்பாற்றி அருளல்வேண்டும்" என்று அவர்கள் அலரினார்கள். தாயினுமினிய நற்சங்கரன் அவர்கள் ஒலத்தைக் கேட்டு ஓடிவந்து அவர்களுக்கு ஊறு செய்த நஞ்சை தம் கண்டத்தில் அடக்கி தேவர்களும் மற்றவர்களும் "நீரே பதி, நாங்கள் பசுக்கள்" எனத்துதிக்க, ஆண்டவன் மறைந்தருளினான் பின்னரும கடலைக்கடையவும் யானையும் குதிரையும், பொன்னும் மணியும், பெண்ணும்பேயும் அன்னமும் அமிர்தமும் கிடைத்தது. பங்கிட்டுக் கொண்டார்கள். வலியார் எளியார் சேர்ந்த கூட்டில் என்ன நடக்கும்? தெரிந்தவன் தெரியாதவன் சேர்ந்த கூட்டில் என்ன நடக்கும்? வலியார் முதற்பாகம் வலியக் கொள்வார்கள். தெரியாதவனுக்கு பாகம் கிடைக்கவொட்டாமல் மோசஞ்செய்வார்கள். இங்குமவ்விதமே நடந்தது. மால் இலக்குமியையும் கவுஸ்தவஆபரணத்தையும், பிரமன் சரஸ்வதியையும், இந்திரன் யானை குதிரைகளையும் கைப்பற்றினார்கள். ஒரு பக்கம் கூட்டாய் நின்று உழைத்த அசுரர்களுக்கு அமிர்தத்தில் பாகம் கிடைக்க வொட்டாமல் அவர்களை ஓட்டினார்கள்.

இக்கதையினால் விளங்கியதென்னை? வறுமையில் வேண்டாமையும், செல்வத்தில் வேண்டுதலும் வைப்பது உயிர்க்குணம். அவ்வாசையால் பாவஞ் செய்ய இடும்பை யுற்றார்கள். இறைவனோ இந்த கூட்டிற் சேரவில்லை. இவனுக்குப்பொருள் மேல் விருப்பமில்லை. விஷத்தில் வெறுப்பில்லை. பாவம் அவனைச்சுட்டிலது. அவன் உலகுயிரோடு ஒற்றிநின்றும்,

அதனால் அவன் தாக்குறவில்லை, அவன் தோய்ந்தும் தோய்விலன். பதி யிலக்கணமும் பசுவிலக்கணமும் இக்கதையினால் முற்றிலும் விளங்குகிறது, பின்வரும் திருக்குறளில் இதைச் சுருக்கி விளக்கியிருப்பதையுங் காண்க.

"வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பையில."

எனவே, வேண்டுதல் வேண்டாமையுடையோர்க்கு யாண்டுமிடும்பையுள என்றவாறு முடிவுரையாவது.

இறைவன் இம்மண்ணையும் வானத்தையும் தோற்றுவிக்க இச்சித்த போது, அவன் இச்சை மனம்போன போக்கன்று, லீலாமாத்திரமன்று, தன்னன்மைக்கன்று, தன் விருத்திக்கன்று, தன்னைக்காண அன்று, தன்னை அறியவன்று, தான் மகிமையடையும் பொருட்டன்று, புகழையும் பூசனையையும் விரும்பியன்று; பின் எற்றுக்கோவெனின் கூறுதும். ஆணவமலத்தில் அழுந்தி, தன் இச்சை அறிவு செயலொன்றுமில்லாது உறங்கிக் கலங்கிக் கிடக்கும் உயிர்களை பரமகருணாநிதியாகிய பரமேஸ்வரன் தன் பேரன்பினால் அவ்விருட் கேவலத்தினின்றும் எடுத்து மாயையினின்றும் அவைகளுக்கு தனுகரண புவன போகங்களை ஆக்கித்தந்து சகலத்திற் புகுத்து. அறிவிச்சைசெயல் நிகழச்செய்து பாவபுண்ணியங்களைச்செய்யவும், அவைகளின் துன்பம் இன்பம் என்னும் பலன்களைப்புசித்து அவதிப்பட்டு அறிவடைந்து, இருவினையொப்பு யெய்தும பொருட்டே இருவினையொப்பு எய்தவும் மலபரிபாகம் பெற, பரமன் பரமகுருவாய் வந்து தன்னைக்காட்டவும், தன் பற்றெல்லாம் ஒழிந்து அருளை அறிந்து அருளில் திளைத்து, அருளில் அமிழ்ந்து அருளே யாகின்றான் இவ்வருளை உணராதவரை, உயிர் பற்றறும் என்னும் பயன்படாச்சொல்லே யாகும்.

மெய்கண்டான் திருவடி வாழ்க.

சீர் திருத்தம்.

ஓம் சிவகணேச கந்தப்பாய நம:.

விநாயகப் பிரபாவ தீபிகையில் கண்டது.

திரிமூர்த்திகளுக்கு விசுவரூபதரிசனங் கொடுத்தருளியது.

"பிரமனுமரியும் பிஞ்ஞகன்றானும் பிரமமாங்கணபதியருளால்
வரமருளவன் றனக்கட்டிடைச் சென்று மகிழ்ந்து பல்லாயிரவண்ட
உருவெலாங்கண்டு சிருட்டி பேதங்களுணர்ந்து பேரின்பமெய்தின
ரென்
றொருமையினெளி வந்தெமக்கருள் சண்டையோங்கு பேரொளியை
வாழ்த்திடுவாம்.

அன்பார்ந்த ஐயன்மீர்!

திரிமூர்த்திகளும் எமது பரங்கருணைத் தடங்கடலாகிய விநாயகமூர்த்தியைப் பூசித்துச் சர்வசித்திகளும் பெற்றபின்னர், அவருள் பிரமதேவரெழுந்து இரண்டு கரங்களையுஞ் சிரமேற் குவித்து, எமது தந்தையே! சிருட்டித்தொழிலை அடியேனுக்கு விதித்தது அடியேனது பாக்கியம். அதனைச் செய்யும் வழியுங் கற்பித்தாலன்றி அடியேனுக்கு மயக்கந் தீராது. ஆகையால் கடாட்சித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதற்குத் திருவுளமிசைந்து ஸ்ரீவக்கிரதுண்டஸ்வாமி ஓ! பிரமனே! நமது கற்பத்துள் நீ பிரவேசித்து, அங்குள்ள சராசரங்களையெல்லாம் பார்த்துச் சிருட்டி விசித்திரங்களைத் தெளிந்து, பின்பு அவ்வாறு செய்யலாம் என்று சொல்லி எதிரினின்ற அவனைத் தனது துதிக்கையாலெடுத்து விழுங்கிவிட்டனர். இவ்வற்புதத்தைக்கூட விருந்துபார்த்துக்கொண்டிருந்தவர்களாகிய விஷ்ணுவும் உருத்திரனும் பேராச்சரியமுற்று நமக்கு இவ்வாழ்வு கிடைக்கவில்லையே யென்று ஏங்கித் தளர்வெய்தினார்கள். அஃதறிந்த கணநாதர் அவர்களையும் உடனே துதிக்கையாலெடுத்து விழுங்கிவிட்டனர். சுவாமியினது கர்ப்பப் பிரவேசமாகிய மூவரும் அங்கு ஒருவரை யொருவர் பார்த்து மகிழ்ந்து, நம்மை இங்குச் செலுத்திய பெருந்தகையினது பேருட்

டிறத்தை நாம் வியக்கத்தரமோ? அவரது திருவுள்ளத்திசைவின்படி நாம் வந்த காரியத்தைப் பார்ப்போமென்று சிந்தித்து அங்குச்சுற்றிலும் பார்த்தார்கள். அப்போது எண்ணிறந்த அண்டங்கள் அவர்களது கண் முன்றோன்றின. அவ்வண்டங்களுள் ஒரு அண்டத்தினுள் அம்மூவரும் பிரவேசித்து, அதன் மத்தியில் அந்தரலோகத்தையும் மேலே பூலோகாதி ஏழுலோகங்களையும், கீழே அதல முதலிய ஏழுலோகங்களையும், அவைகளைச் சிருட்டி, திதி, சங்காரங்களின் வழிபாக நடத்துங் கிருத்திய கர்த்தர்களாகிய திரிமூர்த்திகளையும, அதற்குமுன் கற்பங்களில் சிருட்டியாதிகள் புரிந்து இளைத்து, அவைகளை வெறுத்துத் தவநிலையினின்று சமாதிபுரியும் பிரமனாதி மூவர் பலரையும், பிருதிவி முதலிய பஞ்சபூதங்களையும், குறிஞ்சி முதலிய பஞ்சபூமிகளையும், பொன் முதலிய பஞ்ச தாதுக்களையும், கோமேதக முதலிய நவமணிகளையும், ஜம்பு முதலிய ஏழு தீவுகளையும், இருக்கு முதலிய நான்கு வேதங்களையும் ஆயுள் வேத முதலிய நான்கு உபவேதங்களையும், மந்திரமுதலிய ஆறு வேதங்களையும், வேதாந்த முதலிய ஆறு சாத்திரங்களையும், பிராமணஜாதி முதலிய நான்கு ஜாதிகளையும், பிரமசரிய முதலிய நான்கு ஆச்சிரமங்களையும், இந்திரன் முதலிய எட்டுத் திக்குப் பாலகரையும், தாத்ருமுதலிய பன்னிரண்டு சூரியர்களையும், மகாதேவன் முதலிய பதினொரு உருத்திரர்களையும், அனலன் முதலிய எட்டு வசுக்களையும், பிராணன் முதலிய பத்து வாயுக்களையும், சூரியன் முதலிய (—) ஒன்பது கிரணங்களையும், உலகாயத முதலிய ஆறு புறப்புறச்சமயிகளையும், சைவமுதலிய ஆறு அகப்புறச்சமயங்களையும், பாஷாணவாத சைவமுதலிய ஆறு அகச்சமயங்களையும், தேவர்கள் முதலிய பதினெட்டுக் கணங்களையும், அவர்களது பத்தினிமார்களையும், சனகாதி யோகியர்களையும், நாரதாதி தேவமுனிவர்களையும், வசிட்டாதி பிரம்ம ரிஷிகளையும, கைலாச முதலிய சப்த குலாசலங்களையும், சம்வர்த்த முதலிய ஏழு மேகங்களையும், இலவண சமுத்திர முதலிய சப்த சாகரங்களையும், கங்கை முதலிய ஏழு நதிகளையும், சிங்க முதலிய மிருக பேதங்களையும், கருடன் முதலிய பட்சி பேதங்களையும், கற்பக முதலிய விருக்ஷ பேதங்களையும், காமவல்லி முதலிய கொடிவர்க்கங்களையும், தாமரை முதலிய புஷ்பவகைகளையும், மற்றுமுள்ள சராசரபேதங்களையும், ஒன்றுவிடாமல் பார்த்து மகிழ்ந்து, அப்படியே எல்லா வண்டங்களிலும் நுழைந்து நுழைந்து முற்றும் பரிசோதித்துவிட்டு, அணுக்கூட்டங்கள் பறப்பதுபோல பறந்து கொண்டிருக்கும் அண்டகூட்டங்களிலளவில் காலம் வசித்துச் சிருட்டியாதிகளின் பாகு

பாடுகளைத் தெரிந்து பரமசந்துஷ்டர்களாய், இனி நாம் என்ன செய்வதென்று யோசித்தார்கள். ஸ்ரீகணநாதரது கர்ப்பவாசங்கிடைத்த புண்ணியத்தை எண்ணி இறுமாந்து, நமக்கிவ்வாழ்வு கிடைத்தது நமது சுவாமியினது கடாட்சமென்று வாழ்த்தித் துதித்தார்கள்.

எமது அப்பனாகிய கணேசப்பெருமானது வைபவத்தை நினைக்குந்தோறும் துதிக்குந்தோறும் வழிபடுந்தோறும் எமக்கு அடங்காத இன்பம் உண்டாகின்றது என்று இவ்விதமான பகுப்புகளையுடைய சிருட்டிபேதங்களையெல்லாங் கண்டு சந்தோஷித்து மனம் திருப்தி அடைந்து திரிமூர்த்திகளும் நமக்கு இனி கணநாதர் என்ன கட்டளை இடுவரோ என்று அவரையே துதித்தார்கள். அப்போது பெருங்கருணை வள்ளலாகிய ஸ்ரீ வக்கிரதுண்ட சுவாமியானவர் பிர்மாவைத் தமது துதிக்கையின் வழியாகவும் விஷ்ணுவையும் உருத்திரனையும் தமது இரண்டு செவிகளின் வழியாகவும் வெளிப்படுத்திவிட்டு மறைந்தருளினர்.

இதனால் அண்டத்திலுள்ளது பிண்டத்தில், பிண்டத்திலுள்ளது அண்டத்தில் என்று அறிவோமாக.

அன்பர்க்கெளியன்,

திருமயிலை. ஓம் சிவகணேச கந்தப்ப சபையாரிலொருவர்,

கி. இராஜு கிராமணியார.

(இராஜுவிலாசம்.)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவஞானபோதோற்பத்தி.

(ச. சபாரத்தின முதலியார் எழுதியது)

மெய்கண்டதேவர் வணக்கம்.

அல்லாத பரசமய வலைகைத்தேர்விண்டகல வகல்
புனற்பெண்ணையயல் சூழ்வெண்ணைப்
பொல்லாத விபமுகத்துப் புத்தேடன்பாற்
புனிதசிவாகமப் பொருண்மை பொருந்த வாய்ந்து
நில்லாத நிலையிது மற்றென்று மொன்றாய்
நிற்குநிலையிது வெனமெய்ந் நெறிதேர்ந்தியார்க்கும்
வெல்லாத சிவஞான போதஞ் சொன்ன
மெய்கண்டான் சரணமுடிமீது கொள்வாம்.

தத்துவஞானத்துறைகளைச் சுருக்கமும் நுணுக்கமுமுற்ற எடுத்து விளக்கும்நூல் தமிழிலே "சிவஞானபோதம்" போற்பிறிதில்லை. இதுவே தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்களுட் டலையாயது. இதனை இயற்றினார் ஸ்ரீ மெய்கண்டதேவநாயனார். இவருடைய காலம் ஏறக்குறைய எழுநூற்றைம்பது வருடங்களுக்கு முன்னென்ப.

இந்நூல் சமஸ்கிருதபாஷையிலுள்ள இரௌரவாகமத்திருந் தெடுத்து மொழிபெயர்க்கப்பட்டதென்பது வெகுகாலத்துக்கு முன்றொட்டுப் பாரம்பரியமாக வழங்கிவருவதொருகொள்கை. இது யாதொருபாஷையிலிருந்தாவது எடுத்து மொழிபெயர்க்கப்படாது தமிழ்ப்பாஷையிற்றானே முதன்முதல் அமைந்ததொரு மூலக்கிரந்தமென்பது இக்காலத்துள்ளார் சிலருடைய கொள்கை. இவ்விருதிறக் கொள்கைகளது ஆராய்ச்சியே ஈண்டெடுத்துக்கொள்ளப்பட்டது.

பாரம்பரியம்.

சிவஞானபோதம் இரௌரவாகமத்திருந் தெடுத்து மொழிபெயர்க்கப்பட்டதென்பது பல நெடுங்காலந்தொட்ட பாரம்பரிய வழக்கால் நாட்டப்பட்டுக் கிடக்கின்றது. இந்தப் பாரம்பரியத்துக்கு முக்கிய சாட்சியமாக வரிக்கப்படுதற்குரியார் மெய்கண்ட பரம்பரையில் தோன்றிய திருவாவடுதுறை ஆதீனத்தார், அவர்களுக்கு அடுக்க முக்கிய சாட்சியமாக வரிக்கப்படத்தக்கார், சித்தாந்த ஆராய்ச்சியே தமது பெருநோக்காகக் கொண்டுள்ள ஏனைய ஆதீனத்தார். இவர்களுக்கு அடுக்க இவ்விஷயத்திலே சாட்சியமாகக் கொள்ளத்தக்கார் சித்தாந்த ஆராய்ச்சியிற் கைவந்த பண்டிதர்கள். இந்த முத்திறச்சாட்சியங்களானும், சிவஞானபோதம் இரௌரவாகமத்திலிருந்து எடுத்து மொழிபெயர்க்கப்பட்ட தென்னும் பாரம்பரியம் நன்குற நாட்டப் பெற்றுக்கிடக்கும்போது, நாம் அதனை ஒப்பாதொழிவது கூடாது. நீதித்தலங்களிற்றானும் உலகவழக்கே மற்றெத்தகைய சாட்சியத்தினும் வலியுடையது. அவ்வழக்குப் பிழையுடைத்தெனச் சாதிக்கமுயல்வார் யாருமுளரேல், அவர்கள் முற்பட்டுவந்து, தமது கொள்கையைத்தக்க நியாயவாயிலாகத் தாபித்தல்வேண்டும். அவர்கள் அங்ஙனம் தாபிக்கமாட்டாராயின், உலகவழக்கே நிலைபெற்று நிற்கும்.

சிவஞானபோதம் சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப் பட்டதென்னும் பாரம்பரியத்துக்கு யாதானுமொரு ஆதாரம் காண்கிலமே என்பீராயின், பாரம்பரியத்துக்கு யாதொரு ஆதாரம் காணப்படவேண்டியதில்லை. பாரம்பரியம் என்னுமளவானே எக்கொள்கையும் பெருவலியடைத்திடும். என்னை? ஆதாரம் இருந்தமைபற்றியே பாரம்பரியம் அமைந்தது. அந்த ஆதாரத்தை இப்போது நாம் காணாமைபற்றி, அங்ஙனம் ஒரு ஆதாரம் இருந்திலதென்று முடிப்பது கூடாது. ஆகவே பாரம்பரியம் பெற்றுவிடுதல் மாத்திரையானே, எந்தெந்தக் கொள்கையும் ஆதாரமுடைத்தென்பதும் அங்கிகரிக்கப் படவேண்டியதாம். யாதொரு பாரம்பரியம் ஆதாரமின்றி அமைந்ததென்று சாதிக்கத் தலைப்படுவார் யாருமுளரேல், அவர்கள் முற்பட்டுவந்து அவ்வாதாரமின்மையைப் பிரபல் பிரமாணங்கொண்டு தாபித்தல் வேண்டும். அங்ஙனம் தாபித்தல் கூடாதாயின் பாரம்பரியம் தனது வலியிற் சிறிதாவது தளர்புற்றிடாது.

சிவஞானபோத உற்பத்தியைக் குறித்த இக்கொள்கைக்குப் பாரம்பரியமேபோதிய சாட்சியமாயினும், அதற்குச்சார்பாகவுள்ள ஆதாரங்களுட் சிலவற்றையும் இங்கே எடுத்துக் காட்டி அதுயின்னும் வலிபெற்று நிற்குமாற்றை ஒருசிறிது விளக்குவாம்.

அகச்சாட்சியம்.

(க). தமிழ்ச்சிவஞானபோதமே அது சமஸ்கிருத மொழிபெயர்ப் பென்பதற்கமைந்த சாட்சியத்தைத் தன்னகத்துக் கொண்டிருக்கின்றது. எங்ஙனம்? "மலர்தலையுலகின்" என்னும் அதன் தலைச்சிறப்புப் பாயிரத்தின்கண் "நந்திமுனிகணத்தளித்த வுயர்சிவஞானபோத முரைத்தோன்" என்னும், கடைச்சிறப்புப்பாயிரத்தின்கண்ணே "எந்தைசனற்குமாரனேத்தித் தொழவியல்பால், நந்தியுரைத்தருளுஞானநூல் சிந்தைசெய்து, தானுரைத்தான்" எனவும் முன்னுள்ள தொருநூலையே மெய்கண்ட நாயனர் பின்னர்த் தமிழில் தந்து வைத்தார் என்பது தெள்ளிதின் விளங்கக் கிடத்தலினென்க.

இந்தப்பாயிரங்களிலே முன்னுள்ள தொருநூலைப் பின்னர் மெய்கண்டதேவர் தமிழிற் செய்தருளினர் என்பதன்றி, அவர் அதனைச் சமஸ்கிருதத்திலிருந் தெடுத்து மொழிபெயர்த்தார் என்பது பெறப்பட்டிலதே எனின்; இந்தப்பாயிரங்களால், மெய்கண்டதேவர் சிவஞானபோதநூலைத்தமிழிற் செய்யுமுன் பிறிதோர் சிவஞானபோதம் உண்டென்பது தெற்றெனப் புலப்படுகின்றது. அந்தச்சிவஞானபோதம் தமிழ்ப்பாஷையில் இருந்ததா? அன்றிப்பிறபாஷையில் இருந்ததா? என்பதே நாம் நிச்சயிக்கக்கிடப்பது. தமிழிலே முன்னொருசிவஞானபோதம் இருந்ததென்பதற்குச்சிறந்ததாவதோர் ஆதாரமில்லை. அங்ஙனம் ஒருநூல் இருந்திருக்குமாயின் அதன்பேராவது எமக்குக்கிடைத்திருக்கும். அகத்தியம் இறந்து பட்டுவிட்டதாயினும் அதன் பெயர் இன்னும் நின்று நிலவுகின்றது. அகத்தியத்தினும் அனந்த மடங்கு சிறந்த சிவஞானபோதம் ஒன்று முன்னிருந்துளதாயின், அதன்பெயர் வச்சிரத்தமபம்போல் என்றும் நின்று நிலவிடும். நாலாயிர ஐயாயிரவருடங்குட்கு முன்னிருந்த அகத்தியத்தின் பெயர் இன்னும் நின்று நிலவிட, அதனினும் அனந்தமடங்கு சிறந்ததும், எழுநூற்றைம்பது வருடங்களுக்கு முன்னிருந்ததுமாகிய சிவஞானபோதத்தின் பெயர் மணமுமில்லாமல் ஒழிந்துவிட்டதென்பது அங்கிகரிக்கத்தக்கதல்ல. ஆகவே, தமிழிலே முன்னொருநூல் சிவஞானபோதம் என்னும் பெயர்கொண்டு நிலவிற்றென்பது சிறிதுங் கூடாது. அல்லதூஉம், முந்தொருநூல் சிவஞானபோதம் என்னும் பெயர்கொண்டு நிலவிற்றுயாயின், அதனைப்பார்த்துப் பிறிதொருநூல் செய்த மெய்கண்டதேவர், தாம் இயற்றியநூலுக்கும் சிவஞானபோதம் என்றே பெயரிட்டு உலகத்தை மயங்கவைத்திட மாட்டார். அருணந்திதேவராவது உமாபதிதேவராவது சிவஞானபோத

த்தை முதனூலாகக்கொண்டு தாம் இயற்றிய நூல்களுக்கு அந்த முத னூற் பெயரைக்கொடாது பிறபெயர் கொடுத்தமை இதனை நன்குவற்புறு த்தும்.

ஆகவே, தமிழிலே முன்னொருநூல் சிவஞானபோதம் என்னும் பெய ர்கொண்டு இருந்திலதென்பதும், தமிழில் இருந்திலதாகவே, எமது சமய சாத்திரங்களுக் கிலக்கணமாகிய சமஸ்கிருதத்திற்றானே அது இருந்ததென் பதும், எனவே சமஸ்கிருதத்தில் இருந்தெடுத்தே அதனை மெய்கண்ட தேவர் தமிழில் மொழிபெயர்த்து வைத்தருளினார் என்பதும் தட்டின்றிப் போந்திடும் என்க.

அற்றன்று: முன்னுள்ள சிவஞானபோதமே இப்போதும் உள்ளது: மெய்கண்டார் அந்நூலுக்கு உரைமாத்திரமே செய்தருளினர் என்பீரா யின், மேல் எடுத்துக்காட்டப்பட்ட பாயிரவசனங்களிலே "உயர்சிவஞான போதமுரைத்தோன்" என்றும், "நந்தியுரைத்தருளுஞான நூல்......... தானுரைத்தான்" என்றும் மெய்கண்டதேவர் நூலைச்செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கின்றதேயன்றி, நூலுக்கு உரைசெய்தார் என்று சொ ல்லப்படவில்லை. ஆகவே இக்கூற்றுச் சிறிதும் பொருந்தாதென்க. அன் றியும் மெய்கண்டவள்ளலார் செய்தநூல் "சிவஞானபோதம்" என்னு பெயரால் விளங்குவதன்றி "சிவஞானபோதஉரை" என்னும் பெயரால் விளங்குவதுமில்லை. இதுகொண்டும் இக்கூற்றுப்பொருந்தாமை காண்.

இங்ஙனமுமன்று: இந்தப்பாயிரங்கள் பிற்காலத்திருந்தார் சிலரால் செய்து நூலுடன் சேர்க்கப்பட்டனவாதலால் இவைகள் ஆதாரங்களாகா என்பீராயின்; கடைப்பாயிரம் மெய்கண்டநாயனார் தம்மாலும் தலைப்பா யிரம் அவருடைய சிஷ்யருட் டலைமைபெற்ற அருணந்திதேவராலும் செ ய்யப்பட்டன என்பது பிறிதோர் பாரம் பரியம். பாரம் பரியங்களை எல் லாம் எமது மனம் போனவாறு நாம் தூரம் போக்கிவிடுவதுண்டாயின், சிவஞானபோதம் மெய்கண்டதேவராற் செய்யப்பட்டதென்னும் பாரம் பரியத்தையும் புறங்கண்டொதுக்கிவிடலாம். அதுகிடக்க: அந்தப்பாயிர ங்களைச்செய்தார் யாராயினும் ஆக; அவ்விருபாயிரங்களும் நூலுக்குரிய முக்கியபாகங்களாகத் தொன்று தொட்டு அந்நூலோடு சேர்ந்து நிலவு ற்றுவருதலால் அவற்றை நாம் புறந்தருதல் கூடாது. அவை பொய்யு ரைகளாமாயின், அவற்றின் பொய்ம்மையைப் பிரமாணங்கொண்டு நிரூபி த்தல்வேண்டும். இது கூடாதாயின் அவற்றின் சாட்சியங்களை நாம் த

ளுமாறில்லை என்க. இதுவே நியாயசபைகளில் எடுத்தாளப்படும் நியாய பிரமாண ஆட்சிமுறையுமாம். சிவஞானபோத உற்பத்தியைக்குறித்த இந்தவிஷயத்திலே எம்மை அதிகரிப்பார் ஒருவரும் இன்மையால், நாம் எமது மனம்போனவாறு வாதிப்பது மரபாகாது. அன்றியும் இந்தப்பாயிரங்கள் பிற்காலத்திருந்தார் சிலரால் இயற்றப்பட்டு நூலுட் புகட்டப்பெற்றன என்னும் கொள்கையைத் தாபித்தற்கு, முன்னுள்ள பிரதிகளில் இந்தப்பாயிரம் இல்லாதிருத்தலை அந்தப்பிரதிகளில் ஒன்றையாவது எடுத்துக்காட்டி நாட்டுதல் வேண்டும். இங்ஙனமின்றி நாம் எமது விருப்புச்சென்றவாறு ஓர் ஒருநவீன நியாயத்தை எடுத்துவாதிப்பது அறிவுடையோரால் அங்கிகரிக்கப்படமாட்டாதென்க.

(உ). சிவஞானபோதத்திலே "சத்து" "அசத்து" "சதசத்து" "அந்நியம்" "சூந்யம்" "திதி" "சகசம்" முதலிய பல சித்தாந்த பரிபாஷாபதங்கள் சமஸ்கிருதபதங்களாக இருத்தலால், அந்நூல் ஆதியில் சமஸ்கிருதபாஷையிற்றானே அமைந்துளதென்பது நன்குவலியுறுத்தப்படும். சிவஞானபோதம் தமிழ்ப்பாஷைக் குரியதோர் முதனூலாமாயின், அந்தப்பதங்களின் பொருள்களை யெல்லாம் ஆசிரியர் தமிழ்மொழிகளாற்றானே விளக்கி இருப்பர். இன்னமும் அந்நூலின்கண்ணே "அவத்திகன்" முதலிய வடமொழி மதங்களை ஆசிரியர் எடுத்தாண்டிருப்பதும், அது சமஸ்கிருதத்திலிருந் தெடுத்து மொழிபெயர்க்கப்பட்ட தென்னும் கொள்கையைவலியுறுத்தும். அன்றியும் சமஸ்கிருதத்திலுள்ள ஷட் தரிசனங்களாகிய நியாயம், யோகம், சாங்கியம் முதலிய மதங்கள் இந்நூலகத்தே பலவாறு எடுத்துக்கண்டிக்கப்பட்டிருப்பதும், இது ஆதியிற் சமஸ்கிருத நூலேயாம் என்னும் கொள்கையைப் பெரிதுவற்புறுத்தும். தமிழில் வழக்கில்லாத மதங்களை, தமிழிற் செய்யப்படுவதோர் முதனூலில் கண்டிக்க வேண்டிய அவசியம் சிறிதும் இல்லை என்க.

(௩). சிவஞானபோதத்திலே "அகர வுகாரமகாரம்" என்றும், "அஞ்செழுத்தாலுள்ள மரனுடைமை" என்றும், "கண்டதொரு மந்திரத்தால்" என்றும், பின்னும் பலவாறாகவும் மந்திரப் பிரசங்கம் கேட்கப்படுவதனாலும், மந்திரங்களுக்கெல்லாம் ஆதாரம் பதங்களும் வன்னங்களுமேயாதலாலும், மந்திரபத வன்னங்களனைத்தும் சமஸ்கிருதத்துக்கே சிறப்பாவன வாதலாலும் இவைகள் ஷடாத்துவசக்கரனுள் வைத்தெண்ணப்பட்டுச் சித்தாந்தக் கொள்கைக்கு இன்றியமையாச் சிறப்பினவாய் விளங்கு

மாதலாலும், இவற்றை விளக்கப்புகுந்தநூல் ஆதியில் சமஸ்கிருதநூலாகவே இருத்தல் வேண்டும் என்பதும், அதனையே ஆசிரியர் தமிழில் மொழிபெயர்த்தருளினார் என்பதும் விவேகிகட்கெல்லாம் உடன்பாடாகும். இந்நூலகத்தே சமஸ்கிருதத்துக்குரிய மந்திரப்பொருள்கள் அமைந்து கிடத்தலை நோக்கியே. இதனை விரித்து விளக்கப் புகுந்த அருணந்திதேவனார் தமிழ்மொழிக்குச் சிறிதும் அருகமில்லாத பஞ்சப்பிரம மந்திரங்களையும் பிறவற்றையும் சிவஞான சித்தியாரிலே எடுத்துக்காட்டுவாராயினர்.

முந்தொருகாலத்திலே தமிழிலும் மந்திரங்கள் அமைந்து விளங்கின என்று வாதிப்பாரும் சிலருளராவரேல், அவர்கள் தமிழ் அக்ஷரங்கள் மந்திர சத்த விகற்பங்களுக்கு ஏற்புடையனவல்ல என்பதை மந்திரவித்தையின் வல்லார் வாய்க்கேட்டறிக. அன்றியும் தமிழில் யாதொரு மந்திரமாவது இந்தக்காலத்தில்லாமையும் அவர் கூற்றைப் புறங்கண்டிடுமென்க.

அற்றன்று: ஆசிரியர் இவற்றை எல்லாம் சமஸ்கிருதஆகமங்களிலிருந்தெடுத்துத் திரட்டிச் சிவஞான போதத்தைத் தமிழில் செய்தருளினார் என்பீராயின், இங்ஙனம் வாதிப்பதனால் தமிழ்மொழிக்கு எய்தற்பாலதாகிய பெருமை தான்யாதாமோ? ஆகமங்களில் இருந்தெடுத்துத் திரட்டுதலால் தமிழுக்குப் பெருமையும், யாதொரு ஆகமத்தை மொழிபெயர்த்தலால் அம்மொழிக்குச் சிறுமையும் வந்தெய்திடுமாமோ? ஆனால் இங்ஙனம் கொள்வதனால் சிவஞானபோதத்துக்குரிய பெருமகத்துவம் சிறிது பட்டுவிடும் என்பதை இவர்கள் சிந்தித்தல் வேண்டும். சிவஞானபோதம் சிவவாக்கின் மொழிபெயர்ப்பாமென்னும் கொள்கையைத் தள்ளிவிட்டு, அது மானுடவாக்கேயாமெனச் சாதிப்பது சிவஞானபோதத்துக்கும், அதுவாயிலாக தமிழ்மொழிக்குரிய பெருமையைப் பெரிதுங்குறைப்பதன்றிச் சிறிதும் கூட்டுவதாகமாட்டாதாம்.

நன்றுகூறினீர்: தேவார திருவாசகங்கள் யாதொரு சிவவாக்கின் மொழிபெயர்ப்பாகாமை பற்றித் தமது சிறப்பிற் குறைந்திடுமாமோ என்றுவினவுவீரேல், தேவார திருவாசகங்கள் தோத்திர ரூபமும் சிவஞானபோதம் சாத்திர ரூபமுமாதலின், தோத்திர ரூபங்கட்குரிய அருட்செறிவைச்சாத்திர ரூபங்களுக்கமைத்தல் சாலாதென்க.

அன்றியும் பக்குவான்மாக்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்றாய்ச் சகலாகம சாரமாயுள்ள சிவஞானபோதத்தை இறைவன் தான் திருவாய்

மலர்ந்தருளிய ஆகமங்களுட் புகட்டிவைத்திலனேல், அது அவனுடைய காருண்ணிய நெறிக்குப் பெருங்குறைவை நாட்டிவிடும் என்பதுங்காண்க. கடவுளிலக்கணம் மாறுபடினும்படுக: நாம் எமது நூதன விவேகசாதுரியத்தை நாட்டிவிடுதல் வேண்டுமென்று துணிந்து நிற்பது நாத்திகமுறையன்றி ஆத்திகமுறையாகாதென்க.

(ச). இனி, மெய்கண்டநாயனார் பன்னிரண்டு சூத்திரங்களை மாத்திரமே ஆசிரியயாப்பினும், அவற்றின் வார்த்திகத்தை வசனயாப்பு, வெண்பாயாப்பினும் செய்துவைத்தமையால், அவர் முதனூலை ஒருநடையினும், அந்நூலை விளக்கப்புகுந்த தமது உரையைப் பிறிதொருநடையிலும் செய்துவைத்தார் என்பது நன்கனுமிக்கக் கிடக்கின்றது. அவர் சூத்திரங்களை முதனூலில் இருந்தெடுத்து மொழிபெயர்த்திலராயின், தாம் செய்யப்புகுந்த நூலை விரித்து ஒரேயாப்பிற்றானே ஒருங்கு செய்திருப்பர்.

நூலாசிரியர் தாமே நூற்குரைசெய்வதும், உரையகத்தே உரைசூத்திரங்கள் பெய்வதும் வழக்காமாயினும், சிவஞானபோத சூத்திரங்களின் சொற்சுருக்கத்தையும்பொருட்பெருக்கத்தையும் நோக்கி, அச்சூத்திரங்களை ஒரு சிறிது விளக்கவேண்டுவது அவசியம் எனக்கண்ட ஆசிரியர், சூத்திரங்களும் தமதுவாக்காமாயின், அவற்றை விரித்தெழுதி வைத்திருப்பர். அவற்றுக்கு உரை எழுதிவிளக்கவிட்டிருக்க மாட்டார். அவருடைய உரைதானும் மிகச்சுருங்கியதாதலால், அந்த உரைக்கருத்தையும் நூலகத்துத்தானே பெய்து நூலைச்சிறிது விரித்தெழுதிவைப்பதே விவேகியாகிய அவர் செய்யத்தக்கது. அவர் அங்ஙனம் செய்யாமை, நூல் அவருடைய வாக்கல்லாமைபற்றியே என்பது நன்கு போந்திடும்.

இனி அவர் உரைச்சூத்திரங்களை வெண்பாயாப்பிற் செய்துவைத்தமையும் இங்கே கவனிக்கத்தக்கது. அவர் அச்சூத்திரங்களையும் நூலைப்போல ஆசிரியயாப்பிற்றானே செய்யாதொழிந்தமை, நூல் சிவவாக்கென்பதைக்காட்டி, அவ்வாக்குக்கும் தமதுரைக்கும் பேதந்தெரித்தற் பொருட்டேயாம்.

புறச்சாட்சியம்.

இனிப் புறச்சாட்சியங்களுட் சிலவற்றை எடுத்துக்காட்டுவாம்:—

(க). மெய்கண்டதேவர்பால் உபதேசம்பெற்று அவர்செய்தருளிய "சிவஞானபோதத்தைச்" "சிவஞானசித்தியார்" என்னும் திவ்விய

சாத்திரமாக விரித்துரைத்தருளிய அருணந்திதேவர் தமது நூலின் கண்ணே,

"............முன்னாளிறைவ னருணந்திதனக்கியம்பநந்தி
கோதிலருட் சனற்குமாரற்குக்கூறக் குவலயத்தினவ்வழியெங்
குருநாதன் கொண்டு
தீதகல எமக்களித்த ஞானநூலை............"

என்றெடுத்தோதி இருத்தலால், மெய்கண்டார் செய்தருளிய "ஞான நூல்" சிவபெருமானால் நந்திதேவருக்கும், அவரால் சனற்குமாரருக்கும் உபதேசிக்கப்பட்டதென்பதும் அதனையே தமிழுலகம் ஈடேறும்பொருட்டு மெய்கண்டநாயனார் மொழிபெயர்த்தருளினார் என்பதும் நன்குபெறப்படும். அந்நூல் ஆதியில் தமிழ்ப்பாஷையிற்றானே இருந்ததாயின், அதனை மெய்கண்டார் மீட்டுந் தம்பெயராற் செய்தற்கோர் அவசியமின்மையால், அது பிறிதொருபாஷையிற்றானே இருந்ததென்பதும், அந்தப்பாஷை எமது சமயசம்பந்தமுற்ற சமஸ்கிருதமேயாம் என்பதும் இனிதுபோந்திடுமென்க.

(உ) அருணந்திசிவாசாரியர் "ஆதலினூலிவையெல்லாம் அருமறையாகமத்தே அடங்கும்" என்றும், "அருமறையாகம மனைத்துமுரைக் கையினால் அளப்பரிதாம் அப்பொருளை" என்றும் வேதநூல் சைவநூலென்றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்தநூல்கள்" என்றும் வடமொழியிலுள்ள வேதசிவாகமங்களின் பெருமையை எடுத்துப்பாராட்டி, அவற்றின்பொருளையே "சிவஞானசித்தியாரில்" விளக்குதலினால், அவர் விரித்துரைக்கப்புகுந்த "ஞானநூலா"கிய "சிவஞானபோதம்" வேதம் அல்லது சிவாகமமேயாம் என்பதும், எனவே அதுவும் வடமொழிநூலேயாம் என்பதும் நன்கனுமிக்கத்தக்கனவாம்.

அற்றன்று: வேதசிவாகமங்கள் தாமும் ஆதியிலே தமிழில் இருந்தன என்று கொள்ளலாகாதோஎனின், நாம்அபிமானந்தூண்ட ஓர் ஓர்மதத்தை எடுத்துக்கொண்டு, அதனைத்தாபித்து வேறுபலவாறு ஆரோபிக்கலாம். இந்த ஆரோபங்கள் நியாயமுகத்துநிற்கவல்லனவோ என்பதைநாம் சித்தசமாதானத்தோடு சிந்தித்தல் வேண்டும். தமிழிலே எந்தக்காலத்திலாவது ஈச்சுரவாக்காகிய வேதசிவாகமங்கள் இருந்தன என்பதற்கு எமக்கு இம்மித்துணையாவதோர் ஆதாரமுண்டா? முன்னொருகாலத்திலே இருந்தன என்று தான்வைத்துக்கொண்டாலும், அருணந்தி சிவாசாரியர்

காலத்திலே .. அதாவது, எழுநூறு எழுநூற்றைம்பது வருடங்களுக்குமுன்னே—தமிழில் வேதசிவாகமங்கள் இருந்தன என்று நாம் துணிவது கூடுமா? கூடாதபோது அருணந்தி சிவாசாரியர் சுட்டிக்காட்டிய வேதசிவாகமங்கள் சமஸ்கிருத வேத சிவாகமங்களே என்பதும், அந்த வேதசிவாகமங்களைச் சார்ந்த சிவஞானபோதமும் சமஸ்கிருத நூலேயாம் என்பதும் தட்டின்றிப் போந்திடுமாம்

இனித்தமிழிலே வேதசிவாகமங்கள் இருந்தன என்று நாம் வாதிக்கத்துணியுமுன், நம்மனைவர்க்கும்பெருஞ்சிறப்பினவாய் அமைந்துவிளங்கும் தேவார திருவாசகங்களின் கருத்துகளை நாம் சீர்தூக்குதல் வேண்டும். அவற்றிலே வேதசிவாகமங்கள் என்று சுட்டிக்காட்டப்படுவன எல்லாம் இருக்காதிநான்கும் காமிகாதி இருபத்தெட்டுமாகிய வடமொழிச்சுருதிகளே என்பது நன்கு தொனிக்கும்போது, நாம் அந்தமெய்யறிவாளர் தம்மினும் பேரறிவுடையேம்போல அகங்கரித்து, வடமொழிச்சுருதிகளைப் புறக்கணிப்பது எமது சமயத்துக்கும் சாதிக்கும் பெருங்கேடாம் என்பதை நம்மவர் தமது மனத்திற் சிறிது அழுத்திவைத்தல் வேண்டும்.

(௩) வேதசிவாகமங்களை யெல்லாம் அதிநுட்பமாகஆராய்ந்து சைவ சித்தாந்தத்துக்கும் பெருந்துணையாக அனேக நூல்களையும் வியாக்கியானங்களையும் வடமொழி தென்மொழி இரண்டினும் செய்தருளிய அதிவருணாச்சிரம வாசாரியவதியராகிய சிவாக்கிர யோகிகள் தாம் இயற்றிய சமஸ்கிருத சிவஞானபோத பாஷியத்தில்,

"ரௌரவதந்திரார்க்கதம் சிவஞானபோதக்யம் சாஸ்திரம்"
(இரௌரவாகமத்துள்ளே அடங்கியது சிவஞானபோதம் எனப்பெயரிய சாஸ்திரம்)

என்று வெளிப்படையாக எடுத்துக்காட்டி இருக்கின்றனர். இந்த மகானுபவர் இரௌரவாகமத்திலே சிவஞானபோதம் அமைந்து கிடந்தமையினை தாம் காணாமல், இங்ஙனமானதொரு பெரும் பொய்யைச்சொன்னார் என்று நாம் சொல்லத்துணிவது முறையாகுமோ? அல்லாமலும், வேதசிவாகமங்களிற் பெரிதுபயின்றவ இந்தமகோத்தமர் உண்மையை அறியாது இவ்வாறுமுடியங்கினார் என்றுதான் நாம் சொல்வதுகூடுமோ? கூடாது! கூடாது!! ஆகவே அவருடைய சாட்சியம் இவ்விஷயத்திலே பெருவலியுடைத்தென்க.

இன்னமும், இந்தச்சிவாக்கிரயோகிகள் தாம் இயற்றியருளிய சிவ ஞான சித்தியார் உரையிலே,

"இரௌரவாகமத்திலே பாபவிமோசனப் படலத்திலே, அநுஷ்டுப் புச்சந்தசாக, த்வாதச சூத்திரம் சகலாகம சாரமாயிருக்கும்: அதை உமக்கு உபதேசம் பண்ணுகிறோம். அதைத் தேவமுனிவகணங்களுக்குப் பக்குவமறிந்து போதியுமென்று "ஸ்ரீ புந்தபுஞ்சகாதி" த்வாதச சூத்திரத்தையும் அதனுடைய அர்த்தத்தையும் சிவபெருமான் நந்திநாயனருக்குஉபதேசம் பண்ணினர் என்று எடுத்துக்காட்டியுள்ளார். இந்த நுண்ணிய விபரங்களைஎல்லாம்(அதாவது, சிவஞானபோதம் அமைந்துவிளங்கும் ஆகமத்தின் பெயர், அவ்வாகமத்தில் அது அமைந்துவிளங்கும்படலத்தின்பெயர், அந்தப் படலத்திலே அதுபுனையப்பெற்றுள் சந்தத்தின்பெயர்முதலிய இந்தப் பல நுணுக்கங்களை யெல்லாம்) தமது மனம் போனவாறு கற்பித்துச் சுத்தப் பொய்யை எழுதிவைத்தார் என்று சொல்வது மரபாகுமா? நாம் எடுத்துக்கொண்ட ஓர் ஓர்நவீன மதத்தைநாட்டி விடுதற்காக, நமது சமய சாத்திரங்களிற் பெரிது பயின்று சிவபத்தியிற் சிறந்து விளங்கிய பெருந்தகையாளரைப் பொய்யராக்கிவிடுவது யுக்தமாகாது.

(ச). சிவாக்கிரயோகிகள் செய்தருளிய சித்தியார் உரைக்குப் பாயிரஞ்செய்தார் ஒருவர் (இவர் பெயர் புலப்பட்டிலதேனும், இவர் அவ்வுரைக்குப் பாயிரஞ் செய்தற்குரிய பெரியராய் விளங்கினர் என்பதை மறுப்பது கூடாது.)

"கைலைப்பரம னென்றுரைத்த
திடமிகுவடமொழி யடைவுறத் தெரிந்து
....
தொன்னூ லுரையாற்றெருளுறச்செய்து
முன்னூ னுமம் முறை பெற நிறுவிய
நன்னெறி தருஞ் சிவஞான போதத்தை."

என்றெடுத்துக்கூறித் தமிழ்ச்சிவஞானபோதம் சமஸ்கிருத மொழிபெயர்ப்பே என்பதைத்தெளிவுற விளக்கிப் போந்தனர்.

(ரு). சிவஞான சித்தியாருக்கு உரைகண்டருளிய அறுவருள் ஒருவராகிய நிரம்பவழகியார் செய்த உரைக்குப் பாயிரஞ்செய்த பெருந்தகைவாளர் ஒருவர்

"எந்தை எம்பெருமான் நந்தித்தேவர்க்
காதிரண்டாகக் கூறிய வஞ்ஞான்

திணிமை கொண்டு முனிவர்கணத்தாங்
கருளுப தேசப் பொருளெனவறைய
....
.........................மெய்கண்டானென
நாமந் தோய்ந்தகாமற் காய்ந்தோன்
தன்னுழி தழுவவந்தானுவற"

என்று சிவஞானபோதத்தின் வரலாறு எடுத்தோதியமையும் அது சமஸ்கிருத மொழிபெயர்ப்பே என்பதை இனிதுறகாட்டும்.

(சு). சிவஞான சித்தியாருக்கு உரைசெய்த மற்றோர் உரையாசிரியரும் சித்தாந்த சாத்திரங்களிற் பெரிது பயின்ற பெருந்தகையாளரும் அனேக சித்தாந்த கிரந்தங்களும் வியாக்கியானங்களும் செய்தருளினவருமாகிய ஞானப்பிரகாச தம்பிரான் தாம் இயற்றிய வடமொழிச் சிவஞான போத வியாக்கியானத்திலே அந்நூலின் வரலாறு கூறுமிடத்து, அது இரௌரவாகமத்தின் ஒருகூறாகி அமைந்து விளங்குதலைத் தெளிவுற எடுத்துக்காட்டிப் போந்தனர்.

(எ) இனித்தமிழ்ச் சிவஞானபோதத்தின் பேருமையினைத் தமிழ் நாடறிந்து ஈடேறும்பொருட்டுத் திருவவதாரஞ் செய்தருளிய சிவஞான யோகிகள் தாம் இயற்றிய சிற்றுரையிலே "மலர்தலையுலகின்" என்னும் சிறப்புப்பாயிரத்துக்கு உரை செய்யுமிடத்து

"சிவஞானபோதம் என்னும் வடநூலை—மொழிபெயர்த்துக் கூறி வார்த்திகமென்னும் பொழிப்புரையுஞ் செய்தோன்.....................மெய்கண்டதேவன் என்னும் சிறப்புத்திருநாமமுடையோன்"

என்று சிறிதாவது சந்தேக விபரீதங்கட்கிடமின்றிச் சிவஞான போதம் சமஸ்கிருத சூத்திரங்களின் மொழிபெயர்ப்பே என்பதை வெளிப்படையாக எடுத்துக்காட்டிப் போந்தனர்.

சித்தாந்தக்கடலை வடித்துக் குடித்த கலாமேகமாகிய இந்தமகாயோகிகள் இந்த விஷயத்திலே உண்மையை அறியாது மயங்கினார் என்பேமா? அல்லது உண்மையை அறிந்திருந்தும் அதனை மறைத்துப் பொய்யுரை புகன்றிட்டார் என்பேமா? இங்ஙனமாமெனின் இவருடைய உரையை யாரோ பொருளென மதித்திடுவர்! இதனைப்பொய்யுரை என்றன்றோ எவ்வெவரும் புறக்கணித் தொதுக்கி விடுவர்! இதை அங்ஙனம் ஒதுக்கிவிட்டால் "சிவஞானபோதத்" தின் சிறப்பு யாண்டையதாமோ? அந்தச்

சிறப்புப்பற்றித் தமிழ்மொழிக்கெய்தற்பாலதாகிய பெருமைதான் என்னுமோ?

சிவஞான யோகிகள் உண்மையை அறியாதிருந்தார் அல்லர். அவர் சனங்களிடத்திருந்த விசுவாசத்தைத் தளர்புறச்செய்வது மரபாகாதெனக்கொண்டு, அக்கொள்கையை உடன்பட்டார் போலக்காட்டினர் எனச் சமாதானம் சொல்வாரும் சிலருளர். இது சிவஞான யோகிகள்பால் அறியாமையாற் பெறப்படுந் தோஷத்தினும் பெருந்தோஷத்தை சுமத்திவிடும் என்பதை இவர்கள் சிந்தித்தாரில்லை. உண்மையை உள்ளபடி விளக்குவதே சித்தாந்தத்துறையாகவும், அந்த உண்மையைச் சிறிதாவது வாரந்து வேஷமின்றி எடுத்து விளக்கப் புகுந்த இடத்திலே உண்மையை மறைத்துப் பொய்யுரை புகல்வதா சித்தாந்த சம்பன்னராகிய சிவஞானயோகிகள் செய்யத்தக்கது. அதுவும் சிவபூசாதுரந்தரராய் சிவத்தியானத்துக்கே தமது சித்தத்தை அர்ப்பணம் செய்த யோகீஸ்பரரா இங்ஙனம் செய்தார் என்று நாம் சொல்லத்துணிவது! உண்மையாகாததொன்றை, உலகினர்க்கும் உண்மையன்றெனத் தெருட்டி அவர்களுடைய யயக்கத்தை நீக்குவதன்றி, அவர்கள் அந்தமயக்கத்திலே மேலும் மேலும் ஆழ்ந்தழியுமாறு தந்நெஞ்சறியப் பொய்யுரை கூறுவதா புண்ணியவான்களுடைய இலக்கணம்!! அம்மம்ம! இதுபோலும் கொடியசொல் பின்னுமொன்றுளதா? சிவஞானபோத நூற்கருத்துகளை பிழையுற விளக்கினர் கொள்கைகளை எல்லாம் சிறிதும் கூசாது கண்டித்தொதுக்கிய சிவஞானவள்ளலார் இந்த அல்ப்பவிஷயத்திலா பொய்மொழி கூறத்தலைப்பட்டார் என்று நாம்சொல்லத்தக்கது!! நாம் எடுத்துக்கொண்டமதத்தைத் தாபித்து விடுதற்காகப் பெரியாரைப் பொய்ப்படுத்துவது முறையாகாதென்க.

(இன்னும் ருவம்)

சிவத்துவப்ரகாசிகை.

சிவஞானபோதம் எனனும் சைவசித்தாந்தப் பிரதான பிரமாண நூற்குத் தஞ்சாவூர். குப்புசாமி ராஜு என்பவர் எழுதின மாயாவாதப்போலி உரையைக்கண்டித்து ஒழிக்கும் மறுப்புரையாகிய 'சிவத்துவப் பிரகாசிகை என்னும் இனிய நூலானது ஸ்ரீ மெய்கண்டதேவரது உரைமுகத்துக்கேட்கும் மாணாக்கராகிய ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகளால் இயற்றப்பட்டு ஆரூர் சிவப்பிரகாசப்பிள்ளை என்னும் சிவசாமியாரால் அச்சில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அது இருபத்துமூன்று பாரங்கள் அடங்கியது. விலை ரூபா 2. சமாஜ ஆபிசிற் கிடைக்கும்.